தலைப்பு 292 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 292 - கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக

கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும். தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
i.	ரூபா. 7,007,580 பெறுமதியான 295 கால்நடைகள் மற்றும் பெறுமதி சமர்ப்பிக்கப்படாத 1,416 விலங்குகள் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் கால்நடை வளங்கள் பிரிவில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	தாய் விலங்குகளுக்குரிய பெறுமதியான சொத்துக்கள் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	கால்நடைகளின் பெறுமதி நிதி நிலைமை கூற்றில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
ii.	நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் (ஏசிஏ-6) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 12 காணிகள் மற்றும் 126 உத்தியோகபூர்வ வீடுகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக் கவில்லை.	கணக்கிடப்படாத உத்தியோ கபூர்வ இல்லங்கள் 126 மற்றும் 12 காணிகளை கணக்கீடு செய்வதற்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுப்பதாக.	விரைவில் வேலை திட்டம் ஒன்றை செயல்படுத்தி திணைக்களத்துக்கு சொந்தமான நிதி அல்லாத சொத்துக்கள் அனைத்தையும் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
iii.	செலவின தலைப்பின் கீழ் இடம் பெறும் தவறுகள் அச்செலவின தலைப்பிலேயே சீராக்கம் செய்து சரி செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா. 264,635 ஆன தவறுகளை சீராக்குவதற்குரிய சீராக்கங்கள் சொத்துக்கள் கைதவிர்ப்பாக ஒப்பீடு செய்து தவறாக வெளிப்படுத்துதல் நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களை பதிவுகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	செலவின தலைப்பில் தவறுகள் அந்த செலவினங்களின் மூலம் சீராக்கம் செய்ய வேண்டியதுன் தவறான வெளிப்படுத்தல் நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட கூடாது.

(ஆ) கணக்காய்விற்குச் சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
i. 2018 தெசம்பர் 31ஆம் திகதி கன்மரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்வதற்குரிய வழிகாட்டியின் 1.1.1, 2.3 பந்தியின் பிரகாரம் தொழில் தகைமையுடைய ஒருவரின் மூலம் நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்து கூற்றில் (ஏசீஏ - 6) கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா. 3,259,946,017 ஆக இருந்த நிதி அல்லாத சொத்துக்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நிர்வாகப் பிரிவினால் காணி கட்டிடங்கள் வாகனங்கள் தளபாடங்கள் மற்றும் அலுவலக வாகனங்களுக்குரிய தகவல்கள் ஒவ்வொரு பிரிவிலும் உரிய படிவத்தின் மூலம் பெற்றுக் கொண்டு நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்ட பின்னர் நிதி பிரிவினால் சிகாஸ் முறைமை மூலம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக்	உரிய வழிகாட்டல் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களில் சரியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், அந்த மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
ii. அத்தோடு மேற்படி வழிகாட்டியில் 1.3.1, 2.3, 4.3 பிரிவுகளின் பிரகாரம் சொத்துக்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் சொத்துக்கள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுகளில் எடுத்துக்காட்டவில்லை.	திணைக்களத்திற்குரிய அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீண்டும் மதிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக.	வழிகாட்டல் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக விரைவில் வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

2. நிதி முகாமைத்துவம்

2.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் ரூபா 1,536,870,000 ஆன மொத்த நிதி ஏற்பாட்டில் இருந்து இருந்து மொத்தம் ரூபா. 1,294,262,278 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததால் மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா. 242,607,722 அதாவது 15 சதவீதம் குறை பயன்பாட்டில் காணப்பட்டது.	பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதால் எரிபொருள் படிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் சேமிக்கப்பட்டமை, நிகழ்நிலை ஊடாக கூட்டங்கள் நடத்தப் பட்டமை போன்றவற்றின் மூலம் செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை இயந்திரங்கள் மற்றும் பொறிகள் முறையாக பராமரித்ததன் மூலம் திருத்தங்கள் குறைவடைந்தமை.	எதிர்வரும் ஆண்டுகளுக்காக முறையாக மதிப்பீட்டை தயாரிப்பதற்கும் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை நோக்கங்களுக்கு அடிப்படையாகக் கொண்டு முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	நிதிப் பிரமாணம் 50(ii) பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது அந்த மதிப்பீட்டை முடியுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட 12 செலவின விடயங்களுக்காக ரூபா 60,181,000 மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 08 செலவின விடயங்களுக்காக ரூபா 24,388,000 ஆன குறை மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருந்தது.	மதிப்பீடு தயாரிக்கும் போது முடியுமானவரை அண்மித்த பெறுமதிக்கு தயாரிப்பதற்கு கவனித்துக் கொள்வதாகவும் சில விசேடமான காரணங்களின் பேரில் ஏதேனும் வேறுபாடுகள் இடம் பெறுவதாக.	முடியுமானவரை முழுமையாகவும் சரியாகவும் மதிப்பீட்டை தயாரிப்பதற்காக வேலை திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஒரு கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு கூற்றில் ரூபா 1,482,432 ஆன பொறுப்பு ஒன்று இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாயவாணடின் இறுதியில் காணப்பட்ட பொறுப்பு மீது அப்பெறுமதி கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2,590,827 ஆன பெறுமதிக்கான பொருள் ஒன்று கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது.	பொறுப்புக் கூற்றில் இரண்டு நிர்மாணங்கள் காக பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அப்போ ஒரு இரண்டு பொறுப்புகளில் தவறு ஒன்று ஒரே பெறுமதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் ரூபா 1,108,395 தொகை ஒன்று குறைத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக.	ஆண்டிற்குள் காணப்படுகின்ற அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு அறிக்கை இடுவதற்கும் உறுதிப்படுத்தும் வகையில் உள்ளக கட்டுப்பாட்டு முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1589/30 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயற்பாட்டு விதிக் கோவையின் 18 ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் பிரிவு	ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களிடம் சேவை காலம் ஐந்து ஆண்டுகளுக்கு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இடமாற்றங்களுக்கு உட்பட வேண்டிய போதிலும் 79 உத்தியோகத்தர்கள் 6 ஆண்டுகள் முதல் 21 ஆண்டு காலம் வரை இடமாற்றம் வழங்கப் பட்டிருக்கவில்லை.	பதில் அளித்து இருக்கவில்லை.	5 ஆண்டு சேவை கடந்த பின்னர் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டியதுடன் இடமாற்ற கொள்கை செயல்படுத்தப்படாமை தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2015 ஜுலை 14 ஆம் திகதிய 03 2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக செயல் நிமிர்த்த கட்டுநிதி வழங்கக் கூடிய ஆகக் கூடிய எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதும் 10 சந்தர்ப்பங்களில் 03 உத்தியோகத்தர்களுக்கு ரூப. 109,775 முதல் ரூபா 412,500 வரை மொத்தம் ரூபா 2,405,450 ஆன செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப் பட்டிருந்தது.	ரூபா. 100,000 மேற்பட்ட செயல் நிமிர்த்த கட்டு நிதிக்காக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் அங்கீகாரம் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக.	சுற்றறிக்கை எல்லைகளை மீறி செயல் நிமித்த கட்டுநிதியை வழங்க கூடாததுடன் சட்டத்துடன் இணங்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும.
(இ)	இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு நிதிப் பிரமாணம் கோவை நிதிப் பிரமாணம் 880 முதல் 893	நியதிகளின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிணை வைக்கப்பட வேண்டிய 38 உத்தியோகத்தர்கள் ரூபா. 377,500 ஆன பிணையை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் அளிக்கப்பட்டு இருக்கவில்லை.	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.4 கணக்காய்வுக்கு சான்றுகள் சமர்ப்பிக்காமை

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
நாட்டில் காணப்படுகின்ற முட்டை, மாமிசம், பால் வகை உற்பத்திகளின் தரத்தன்மை குறைவடைவதற்கு கால்நடை உணவுகளின் தாக்கம் இருப்பது தொடர்பாக பரிசோதனைக்குரிய தகவல்கள் மற்றும் முறையான ஒத்துழைப்பை கணக்காய்வுக்கு வழங்காமல் கணக்காய்வு விடய பரப்பை மட்டுப்படுத்தியமை காரணமாக 1986 இன் 15 ஆம் இலக்க கால்நடை உணவு சட்டத்தின் 6 (ஆ) 10 (ii) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கால்நடை உணவுகளின் தரம் தொடர்பாக பதிவாளரின் முறையான பொறுப்பு நிறைவேற்றப்பட்டதா என கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாதது பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை.	பதில் அளிக்கப்பட்டு இருக்கவில்லை	கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் மற்றும் ஒத்துழைப்பை வழங்காது மட்டுப்படுத்துதல் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தரிற்கு எதிராக முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கணக்காய்விற்கு தேவையான தகவல்களையும் ஒத்துழைப்பையும வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவில் 2024 வருட ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட ரூபா 112.68 மில்லியன் கூட்டுத்தொகை 68 நிர்மாணங்களில் ரூபா 74.22 மில்லியன் கூட்டு பெறுமதியான 49 நிர்மாணங்கள் அதாவது 72 சதவீதம் நடப்பாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை	பொறியியலாளர் உட்பட தொழில் நுட்ப பதவியை இயலளவு பாரியளவில் குறைபாடு காணப்படுவதால் 2024 ஆம் ஆண்டு திட்டமிடப் பட்டிருந்த நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்களின் ஒரு பகுதி மாத்திரம் மேற்கொள்ள நேர்ந்ததாக.	திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.2 எதிர்பார்த்த இலக்கை அடையாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**குண்டசாலை மத்திய கோழி ஆராய்ச்சி நிலையம்**		
i.	உள்நாட்டு கோழிகளை விருத்தி செய்து மேம்படுத்தல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்ற நோக்கில் இந்நிலையம் செயற்பட்ட போதும் இங்கு கோழி ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் பின்னர் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடுஉயர் இயலளவிலான 5,420 ஆன கோழிக் கூடுகளில் கோழி வளர்ப்பு 1976 என 36 சதவீதத்தில் குறைந்த காணப்பட்டது.	இந்த நிலையத்தின் நோக்கம் களத்தில் காணப்படும் உள்நாட்டு மரபணுக்களைப் பாதுகாத்தல் மற்றும் கோழிக் குஞ்சுகளின் தேவைக்கு அமைய முட்டைகளை அடை காப்பதற்காக கோழிகளைப் பண்ணையில் உற்பத்தி செய்தல்.	அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்காமை தொடர்பான முறையான பரிசோதனையைத் செயல்திட்ட நோக்கங்களை கொண்டு வருவதற்கான வேலைத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

ii.	கோழி கூடுகளில் தர அளவிற்கு கூடுதலாக 130 கோழிகள் தடுத்து வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டில் ரூபா. 1,350,364 ஆன மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.	தொழில்நுட்ப தேவைப்பாடு உள்ளடக்கப்பட்ட பெறுமானமான கணக்குகளை மாத்திரம் பண்ணைகளில் வைக்கப்பட்டு பண்ணைகள் நடாத்திச் செல்லப்படாததுடன் அதற்காக இன விழித்து சதவீதம் மரண விகிதம் இன விருத்தி செய்கிறான் மற்றும் ஏனைய தொழில்நுட்ப விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுவதாக.	அரசின் நிதி சிக்கனமற்ற வகையில் செலவிடப்படாமல் சிக்கனத்துடன் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும்
iii.	பொருளாதார பெறுமதி காலம் முடிவடைந்து 753 விலங்குகள் கைதவிர்ப்பதற்குரிய முகாமை தீர்மானம் எடுப்பதில் பலவீனம் காரணமாக விலங்குகளை கைதவிர்க்காமையால் 2025 மார்ச் 07ஆம் திகதி வரையில் கோழிகளின் உணவுக்காக மாத்திரம் ரூபா. 1,334,814 ஆன அனாவசிய கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.	484 விலங்களை அகற்று வதற்காக தொழில்நுட்ப குழு நியமிக்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் இதுவரை கூறுவிலை கோரப்பட்டுள்ளதாகவும் அந்த விலங்குகளை விரைவில் அகற்றுவதாகவும்	கைதவிர்ப்பு நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளாமை தொடர்பாக முறையான பரிசோதனை செய்வதற்கும் எதிர்காலத்தில் இந்நிலைமையை தவிர்ப்பதற்கும் வேலை திட்டம் ஒன்றை ஈடுபடுத்தப்பட வேண்டும்.
(ஆ) i.	இம்புலந்தண்ட கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த 05 ஆண்டுகளில் 250 ஆடுகளை அபிவிருத்தி விருத்தி செய்வதற்கும், வர்த்தக பண்ணைகளை ஏற்படுத்துதல், போயர் வகையிலான ஆடுகளை உற்பத்தி செய்தல் போன்ற நோக்கில் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 37,341,430 தொகை செலவிட்டு சுகாதார நியதிகள் மற்றும் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலில் இருந்து விலகி போயர் வகையிலான 100 ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.	பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை.	முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இணக்கப்பாடு தெரிவிக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
ii.	2024 திசெம்பர் 31 உள்ளவாறு நிலையத்தில் நோய் நிலைமையில் உள்ள 141 ஆடுகள் மாத்திரம் மீதியாக காணப்பட்டதுடன் திட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.	பதில் அளிக்கப்பட்டு இருக்கவில்லை.	நோய் உள்ள கால்நடைகளை அகற்றுவதற்கும், திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றாமை தொடர்பாக பொறுப்புகூற வேண்டியவர்களுக்கு

			எதிராக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.
iii.	நோய் ஆடுகளை (CEA நோய்) கைதவிர்ப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் ஏற்படுத்தப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் நிலைமையில் உள்ள ஆடுகள் பராமரிப்புக்காக ரூபா. 75,336,944 தொகை அவர்களின் இறக்குமதி செலவினம் உட்பட மொத்தம் ரூபா.112,678,374 தொகையான செலவினம் அரசுக்கு விளைவற்ற செலவினம் ஒன்றாக இருந்தது	இந்த ஆடுகளைத் தனிமைப் படுத்தும் நிலையங்களில் வைத்திருத்தல் CAE நோய்க்கு உட்படுத்த பட்டமை காரணமாக நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்ததாக.	- மேற்படி -
(இ)	**தெலகர ஆடு இனவிருத்தி நிலையம்**		
i.	2020 ஆம் ஆண்டின் போது ஜமுனாபாரி ஆடுகளை இன விருத்தி செய்வதற்காக தெலஹர ஆடு இனவிருத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் முந்தைய 05 ஆண்டுகளில் குறித்த செயற்திட்டத்தின் நோக்கமான சமூகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 213 ஆடுகள் முதல் 31 வரை விரைவில் வீழ்ச்சி அடைந்திருந்தன.	2020 - 2022 காலப்பகுதியில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலமை எரிபொருள் சிக்கல் மற்றும் பொருளாதார பிரச்சனை இதற்காக இதற்கான காரணங்களாக இருந்ததாக.	முறையான பரிசோதனை மேற்கொண்டு திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் செயற் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு புதிய வேலை திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற் கும் முயற்சி எடுத்தல் வேண்டும்.
ii.	நிலையத்தில் கால்நடைகள் Blue Tounge நோயிலிருந்து பாதிக்கப்பட்டவைகளுக்கு நடவடிக்கை எடுக்காமல் நோய்களைப் பரப்பும் ஆடுகளை பராமரிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதிவரை மொத்தம் ரூபா 34,331,552 செலவினம் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.	BT உடைய கால்நடைக்கு உள்ள அந்த நோய் மேலும் ஏனைய கால்நடைகளுக்கு பரவுவதற்கு சந்தர்ப்பம் இல்லாததால் இந்த கால்நடைகளை பராமரிப்பதற்காக செலவிடப்படும் கிரயம் விளைவற்றட செலவினமாக அர்த்தப்படுத்த முடியாது என்பதாக.	அரசின் பணத்தை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்

(ஈ)	**பொலன்னருவ செயற்கை சினைப்படுத்தல் நிலையம்**		
i.	உலர் வலயத்திற்குரிய கலப்பு மாடு வகைகளில் விந்து உற்பத்தி மற்றும் நாளாந்த செயற்கை இனவிருத்தி பயிற்சி அளிக்கும் நோக்கில் 100 ஏக்கர் பரப்பளவில் இருக்கும் 48 மாடுகளுக்கு இடையே 39 விலங்குகள் நோய் தொற்றிய காரணமாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலையம் முழுமையாக செயற்படாமால் இருந்தது.	நோய் பரவலைக் கட்டுப்படுத்து வதற்கு சிரமம் ஏற்பட்டமை மற்றும் செலவுகளை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இப்பணிகள் யாவும் குண்டசாலை மத்திய செயற்கை சினைப்படுத்தல் நிலையத்திலிருந்து மாத்திரம் மேற்கொள்ளப்படும் என்று.	உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் நிலையத்தில் செயற்படுத்தில் வைப்பதற்கும் புதிய வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.
ii.	நோயிலான விலங்குகளை கை தவிப்பதற்காக விரைவான ஈடுபாடொன்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைத்தினால் மேற்கொள்ளமையால் ரூபா. 3,067,797 பெறுமதியான 55,270 பசு விந்து வடிகள் உற்பத்திகள் ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	குண்டசாலை செயற்கை சினைப்படுத்தல் நிலையத்தில் மாத்திரம் பசு விந்துகளை சேகரித்தல் உற்பத்தி செய்தல் மற்றும் பகிர்ந்தழித்தல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதாக.	- மேற்படி -
iii.	முழுமையாக செயறபாடாதிருந்த நிலையத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா. 9,449,053 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது அரசாங்கத்திற்கு விரைவற்ற செலவினை பொறுப்பாக இருந்தது.	இலங்கையில் தனியார் மற்றும் அரசின் செயற்கை சினைப்படுத்தல் நுட்ப நிபுணர்களை பயிற்சி அளிக்கும் ஒரே நிறுவனம் பொலன்னருவை செயற்கை சினைப்படுத்தல் நிலையம் என்பதாக.	- மேற்படி -

3.3 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகைகள் செயற்கை சினைப்படுத்தல் நிலையம் அபிவிருத்தி செய்யும் செயற்பாடு 2023 மூலம் ஆய்வு கூடங்கள் உபகரணங்கள் கொள்வனவுக்காக ரூபா 24,000,000 ஆன செலவின மதிப்பீடொன்றுறு செய்யப்பட்டிருந்து அதற்காக ரூபா. 72,346,750 செலவிடப்பட்டிருந்ததால் பெறுகை திட்டத்திலிருந்து விலகி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு திட்டமிடல் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	விலங்குகளை இறக்குமதி செய்வதற்காக பெறுகை செயற்பாடு ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கேள்விதாரர் முன்வராததால் திருத்திய பெறுகை திட்டத்தின் ஊடாக ஆய்வு கூட உபகரணங்களை கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	பெறுகை திட்டம் சரியாக தயாரிக்கப்படாமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 04 நிறுவனங்களில் அரசுக்கு சொந்தமான 06 சொத்துக்கள் 28 உருப்படிகள் ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக எவ்வித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டன.	தொழுவங்களை திருத்து வதற்காக நிதி ஏற்பாடு தற்போது கோரப்பட்டுள்ளதாகவும், விவசாய நிலத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி செல்லும் நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பதற்காக தேவைப்பாடு இன்மை, தேவைப்பாட்டின் மட்டத்தின் தேவைக்கேற்ற எதிர்பார்த்த மட்டத்தில் விலங்குகள் பண்ணையில் இல்லாமை, மோட்டார் சைக்கிள் பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் இன்மை, சய்லேஜ் உற்பத்தி செய்வதற்கு அவசியமின்மை, Semen Collection Yard பகுதி செயற்கை சினைப்படுத்தல் பயிற்சி நடவடிக்கைகளின் போது பயன்படுத்த எடுப்பதாகவும் சிற்றுண்டிசாலை கற்புல, செவிப்புல வசதிகள் முழுமையானதன் பின்னர் முழு நேர விரிவுரை மண்டபம் ஒன்றாக பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக.	சொத்துக்கள் விளைவுற்ற வகையில் இல்லாமல் பயன்படுத்துவதற்காக வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

3.5 நிதி முறைகேட்டு தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கன்னொருவ கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினசிராப்பரினால் (சரப்) மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 14,749,160 ஆன நிதி முறைகேடு தொடர்பாக நி.பி 104(4) இன் படி பூரண பரிசோதனை அறிக்கை மீளாய்வாண்டு இறுதிவரையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	. பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை	நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஆ)	நிதி முறைகேட்டிற்குரிய ஏற்றுக் கொள்ள நேரடியாக பொறுப்புக்குட்படும் நீதியாளருக்கு (சிராப்பர்) எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதும் இந்த முறைகேட்டிற்காக பொறுப்பிற்கு உட்படும் ஏனைய தரப்பினர் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை	முறையான பரிசோதனை மேற்கொண்டு முறைகேடுகளுடன் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்

3.6 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நி.பி 104 பிரகாரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்கள் சேதங்கள் திட்டவட்டமாக இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டியதாகவும் ஆண்டு 1 இற்கும் 5 இகும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 392 சந்தர்ப்பங் களுக்குரிய சேதங்கள் மற்றும் நட்டங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா. 32,033,833 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சேதங்கள் நட்டங்கள் தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்துடன் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நட்டங்கள் மற்றம் சேதங்களை விவைில் அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(அ)	நி.பி. 104(4)) பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டு 1 இற்கும் 5 இகும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த ரூபா. 6,711,879 கூட்டுப் பெறுமதியான சேதங்கள் மற்றும் நட்டங்கள் 289 சம்பவ அறிக்கைகளின் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.	நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	பரிசோதனைகள் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நட்டங்கள்மற்றும் சேதங்கள் தொடர்பாக பரிசோதனைகளை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	ரூபா 255,534 கூட்டு பெறுமதி ஆன 30 விலங்குகள் மரணித்து 1 ஆண்டிற்கும் 2 இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் உரிய மரண பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக உடனடியாக பரிசோதனை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை குழு தீர்மானத்தின் பிரகாரம் 2020 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வாய் நோய் தடுப்பூசி நோய்களுக்கான 100,000 தடுப்பூசிகள் ஒரு அலகு ரூபா 82 வீதம் கொள்வனவு செய்யப்பட்டதால் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 3.9 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக செயற்குழு பரிந்துரையின் பிரகாரம் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக நிறுவனத்திற்கு வெளியே இருந்து ஏவரேனும் அரச உத்தியோகத்தர் பங்கு பெற்றிருக்கவில்லை. புலனாய்வு அறிக்கை மூலம் எவ்வித நட்டமும் ஏற்படவில்லையென தீர்மானிக்கப் பட்டிருந்த போதும் இது தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொருத்தமான ஈடுபாடு ஒன்றை காட்டி இருக்க வில்லை.	இப்பரிசோதனை குழுவில் வெளி அங்கத்தவராக விவசாய அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவின் நிர்வாக உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பரிசோதனை அறிக்கையின் பிரதி ஒன்று அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக.	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தில் ஈடுபாட்டுடன் சுயாதீனமான பரிசோதனை குழு ஒன்றின் மூலம் செயற் குழுவின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொல்கொல்ல கால்நடை டிசைன் ஆய்வு கூடத்திற்காக Automatic 20 L &200 L Bioreactor இயந்திர மொன்று 2022 ஜூலை 29 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டி ருந்ததுடன்	புதிய உபகரணத்தின் மூலம் வருடாந்த தடுப்பூசி வடிகள் 12 இலட்சம் உற்பத்தி செய்ய முடியாத என்பதுடன் அதன் ஆகக்கூடிய	இந்த பொருளாதார தீர்மானத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக

அதற்காக ரூபா. 96,548,000 தொகை செலவிடப் பட்டிருந்தது. நாட்டின் காணப்படும் சராசரி தடுப்பூசி தேவையான 300,000 தடுப்பூசி வடி அளவினை பூர்த்தி செய்வதற்கு ரூபா 96 மில்லியன் செலவிடப்பட்டு வருடாந்தம் 500,000 வடி முதல் 1,200,000 வரை இயலளவு உடன் புதிய இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் ஊடாக சராசரியாக 300,000 வடி அளவில் உற்பத்தி செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு தேவையற்ற செலவினப் பொறுப்பொன்றை மேற் கொள்வதற்கு நேர்ந்திருந்ததுடன் உரிய இயந்திரம் குறைப் பயன்பாடுடன் காணப்பட்டது.	இயலளவு 5 இலட்சம் ஆகும். 12 இலட்சம் தடுப்பூசி வடிகளை உற்பத்தி செய்வதற்கு 5 ஆண்டுகளில் திட்டமிடப் பட்டுள்ளதாக.	முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் அரசின் பணத்தை செலவிடும் போது அதற்கு செலவிட்ட பணத்தில் இருந்து ஆகக்கூடிய பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வேலை திட்டம் ஒன்று அறிமுகப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. நல்லாளுகை

4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
கன்னொருவ மத்திய கால்நடை புலனாய்வு நிலையத்தில் ஆய்வுகூட பரிசோதனை நடவடிக்கைகளில் இறைச்சி விடயத்துக்குரிய இறைச்சி நோய் பரிசோதனை அறிக்கை வழங்கப்படுவதோடு இறைச்சிக்காக கால்நடை வளர்ப்போர் இறைச்சி இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக பதிவு செய்து மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இறைச்சி ஏற்றுமதிக்குரிய இறைச்சி அளவை பரீட்சித்து பார்த்து அங்கீகாரம் வழங்குதல் இடம்பெறாமல் இருந்ததுடன், 06 மாதங்களுக்கு ஒரு தடைவ விவசாய பண்ணைகள் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கல் இடம் பெறுகின்றது. அதன் காரணம் நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ் அதற்குரிய இறைச்சி இருப்பின் தரத்தில் வேறுபாடு காணப்படக் கூடுமென்பதாக அவதானிக்கப்பட்டது	எதிர்காலத்தில் அதற்காக போதிய அளவு பதவியணியினர் மற்றும் ஆய்வுக்கூட வசதிகள் கிடைத்தால் இந்த முறையில் ஒவ்வொரு ஏற்றுமதிக்குரிய இறைச்சி இருப்பு பரீட்ப்பதற்காக முடியும் என்பதாக.:.	செயற்பாட்டு நடவடிக்கைகளின் செயலாற்றலை செற்திறனாக மேற்கொள்வதற்கு முறையான வேலை திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவி அணியுடன் ஒப்பிடும் போது 216 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 02 பதவிகளில் மிகை ஊழியர்கள் 23 ஆக இருந்தது.	பதில் பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	பதவியணி மீளாய்வு செய்யப்பட்டு தேவையான வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கும் மிகை பதவியினரை சேவைகள் ஈடுபடுத்துவது தொடர்பாக முறையான பரிசோதனை் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.